உ
சிவமயம்



தென்மராட்சி – மீசாலை மேற்கை வதிவிடமாகக் கொண்ட

## அமரர் கந்தையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் சிவபதம் குறித்த

# நினைவில் நிறைந்தவை

26.07.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பா



# சமர்ப்பணம்

அருமையாம் மண்ணில்
அரிய பயிர் வளர்த்து
பெருமையாய் பேணி
பெற்றிட்ட பிள்ளைகளை
திருவுடன் வாழத்
தெளிவினைத் தந்தவரே
அருளுடன் அன்பும்
பண்பும் மிளிர
ஆசையாய் இம்மலரரைக்
காணிக்கை செய்து
நின்றோம்

அன்புடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

# திரு. கந்தையா சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



வையத்துள்

22

11

1937

வானத்துள்

26

06

2006

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு வியவருஷ மானி தனிற் பூர்வம் தான்
பூண்ட பிரதமை சீர்திதியில் - மாண்பிலங்கு
மீசனடி யைச்சேர்ந்தார் சுப்ர மணியம் தான்
காசினியில் வாழ்வுவிட்டே தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

### திருச்சிற்றம்பலம்

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பிலணைந்த பிரானடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

## *திருஞான சம்பந்தர் தேவாரம்*

பண் :- நட்டபாடை இராகம் :- கெம்பீரநாட்டை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் :- நட்டராகம் இராகம் :- கெம்பீரநாட்டை

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமேயிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

## *திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகம்*

காலனைக் காலாற் காய்ந்த கடவுள் தன்னைக்
காரோணங் கழிப்பாலை மேயான் தன்னைப்
பாலனுக்குப் பாற்கடலன்றீந்தான் தன்னைப்
பணியுகந்த அடியார்கட்கினியான் தன்னைச்
சேலுகளு வயலாரூர் மூலட்டானஞ்
சேர்ந்திருந்த பெருமானைப் பவள மீறை
ஆலவனை அரநெறியிலப்பன் தன்னை
அடைந்தடியேன் அருவினை நோய் அறுத்தவாறே.

## *திருவாசகம்*

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினை சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆயசிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிருவா ரூரின்
மழவிடை யார்க்கும் வழிவழி ஆளாய்
மணம் செய் குடிப்பிறந்த
பழ அடியாரொடுங் கூடிநம்பானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி
அளவிலா அளவு மாகி
சோதியாய் உணர்வுமாகித்
தோன்றிய பொருளுமாகிப்
பேதியா தேகமாகிப்
பெண்ணுமா ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

எழுகடல் மணலை அளவிடில் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபயம் எனதுயிர் உடலும்
இனிஉயிர் விடுக முடியாது

கழுகொடு நரியும் எரிபுவி மறலி
கமலனும் மிகவும் அயர்வானார்
கடனுன தபயம் அடிமை உன் அடிமை
கடுகி உன்னடிகள் தருவாயே

விழுதிகழ் அழகி மரகத வடிவி
விமலி முன்னருளும் முருகோனே
விரிதலமெரிய குலகிரி நெரிய
விசைபெறும் மயிலில் வருவோனே

எழுகடல் குமுற அவுணர்கள் உயிரை
இரைகொளும் அயிலை உடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியூ
ரினில் நடமருவிய பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்தவை........

செந்தமிழும் நறுங்கலையும் திகழும் சைவமும்
சுந்தரம் என்ன உயர் ஆலயங்கள் பலவும்
எங்கும் விளங்கிடும் தென்மராட்சி யதனில்
தொங்கும் குலைநிறை தெங்குபனை மாவும்
என்றும் பழம்சொரி கனிமரங்கள் பலவும்
நின்று பயன்தரு **மீசாலை** அதனில்
வடக்காம் வயல் கரையண்டிய பெரியன்
பொன்னர் கந்தையாவும் பொன்வள்ளிப் பிள்ளையும்
பெற்ற நற்றவப் பேறதன் விளைவாய்
பிறந்தார் பிள்ளைகள் இருவர் ஆகவும்
மூத்தவன் சுப்பிரமணியன் என்னவும்
இளையவன் தம்பி செல்லத் துரையுமாம்.

மூத்தவன் சுப்பிர மணியனைத் தானும்
முத்தெனக் கொண்டு சீராட்டிப் பாராட்டி
பள்ளிக் கனுப்பி பாடங்கள் கற்க
தம்பையாநல் லாசிரியர் தலைமையாம் பள்ளி
தக்கதாம் விக்கினேஸ்வரா வெனவே சேர்க்க
ஆடியும் பாடியும் அறிவைத் தேடியும்
பெற்றோர்க்குத் தோட்டத்தில் உதவிகள் செய்தும்
படித்த காலை பாட்டுக்கள் கேட்டிட
குமார சாமியாம் சங்கீத பூஷணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து வைத்தவர் இசையினைக் கற்றவர்
அண்ணா மலையினில் அரியதோர் இசையை
நண்ணியே கற்று நாட்டுக்கு வந்தவர்
அன்னவ ரிடமே சென்று படித்திட
விரும்பியே வீடு தேடிச் சென்றுமே
வரும்படி இல்லை அடுக்குமோ எனக்கு
வாய்க்குமோ இசையும் படித்திட விருப்பம்
பாரதி பாடலில் ஆவது கொஞ்சம்
பாடிடக் கேட்பேன் நீவிர்தான் தஞ்சம்
இப்படிக்கேட்டு இசையுடன் பாடலை
அப்படிச் சிலநாள் தானும் கற்றனன்.

எஸ்.எஸ்.சி பரீட்சையில் தானும் தேறி
எவ்வளவோ நாட்கள் ஆயின மேலும்
காலங்கள் கடந்தது கலட்டி விநாயகன்
கண்விழித் தானோ கருணைக் கடலாய்
அடியெடுத்த அன்பனை ஆதரித் தானோ
அன்பனுக் கன்பனைத் அடிபணிந்த அன்பனை
காத்து கலங்காமல் காக்கநினைத் தானோ
வாசலில் இருந்து வானத்தைப் பார்த்தும்
வருவாயா என்று வரத்தினைக் கேட்டும்
உருகாமல் உருகிய ஓலத்தைக் கேட்டும்
அருளினான் குரலை அப்பனே பாடென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிய மொழிக்கு ஆளான தென்னோ
சென்ற விடமெல்லாம் பாடிய பாக்கள்
உள்ளம் கனிந்ததோ உவகை கொண்டனரோ
வந்தது வேலை ஓமந்தை வவுனியா
நின்ற திசைப் பாடம் நேரம் தான் இல்லையே
பள்ளிக் கடமையில் பாடத்தைப் புகட்டி
வெள்ளிகள் தோறும் வீட்டுக்கு வந்தும்
கலட்டி விநாயகனைச் கண்ணில் வைத்தும்
காவல் வைரவரைக் கைதான் கூப்பியும்
போனது காலம் புதுக் கனவாகவே.

சங்கீதம் கற்ற சங்கதி என்னவோ
சங்கீதக் குமார சாமியார் தங்கையாம்
நெசவு ஆசிரியை சேது நாயகியை
நேசமுடன் தான் திருமணம் புரிந்து
கொண்ட இல்லற நல்லறப் பேறாய்
வந்தனர் புத்திரர் வாய்த்த வாறன்றே.

மூத்தவன் புத்திரன் சிவகுமார் என்றின்னும்
இளையவன் மைந்தன் சிவசுதன் என்றும்
நாமம் சூட்டி நல்லவர் வல்லவர்
நாமுமே ஆக்குவோம் இரு மக்களையுமே
இப்படி நல்லவா றெண்ணி நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் தன் பதவி உயர்ந்திடப் பின்னும்
ஆசிரிய கலாசாலைப் படிப்பு முடித்து
மத்தியாம் கண்டி சரஸ்வதி ம.வியும்
மந்துவில் றோமன் அ.த.க பள்ளியும்
அல்லாரையினில் அ.த.க பள்ளியும்
ஆசிரியப் பணியின் அவசியம் அறிந்து
சத்தம் போட்டு கல்வி புகட்டிய
சங்கதி இதுதான் சத்தமோ பெரிதாம்
அண்டை அயலுக்கும் இரகசியம் இல்லை
கண்டவர்களுடன் கதைகளும் பல மணி
சொன்னது கேட்டது சூழலில் நிறையும்
இப்படி யாக சத்தம் போட்டே
சட்டம்பியார் என்ற பட்டமும் பெற்று
பெற்ற பிள்ளை களைப் பெருமையுடனே
குறை யில்லாமல் குதூ கலமாக
நிறையப் படிக்க நினைத்தே முயற்சி
எடுத்து ஊக்கமும் கொடுத்தே வளர்த்து
உயர்கல்வி கற்றிட உரமாய் நின்று
வருவாய் பெருக்கி வளமாய் உதவி
வந்த காலை நாட்டில் குழப்பம்
மிகுந்திட கலங்கி வேதனையால்
துடித்து துன்பம் துயரம் அடைந்து
விரைவாய் வேறு நாட்டினுக் கனுப்புவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறேதும் இங்கே செய்வதற் கில்லை
இப்படி யாக இங்கித மாக
தப்பவும் வைத்தார் தகப்பனாய் தானுமே.

நாட்டினில் குழப்பம் நலிந்தது தமிழும்
வாட்டினார் உயிர்களைக் வதைத்தார் மனங்களை
ஏட்டினில் எழுதா மறைகளாக இவைகள்
ஏன் இந்தத் துயரம் எப்படி அடுக்கும்
வீட்டுக்கு வீடு வாசற் படிகளாம்.
வீணே சொல்ல வில்லை உண்மை
பாட்டினில் துயரத்தை நாம் மறப்போமோ
பைந்தமிழ் பாட்டினால் நைந்திடும் அன்றோ
படிக்கவா வேண்டும் பக்தி போதாதா
எடுத்த முடிவால் எழுந்ததோ இசையும்
பொருளைப் பிரித்ததில் அர்த்தம் கண்டு
அருளைப் பாடென்று தந்தது அவனோ
கோயில் குளமென்ன கும்பிடும் வீதியென்ன
கூச்சம் இல்லாமல் பாடல்கள் கேட்கும்
செத்தவர் தானே நாமொரு கதிரையில்
உட்கார்ந் திருப்போம் அவர்க்கிது தெரியுமா
கூப்பிட் டழைத்தால் குழைந்து ஒரு கையில்
ஒலிவாங்கி கொடுத்தால் உசாராய் பாடலாம்
கூட்டத்தில் தானே குரலைக் காட்டலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டத்தின் நாயகன் அவனுக்கு கேட்குமோ
படித்தவன் நானே பண்முறை தெரிந்தவன்
இடித்துரைப் பேனே என்றும் தான் பாடலாம்
உள்ளே நல்லொரு சரக்கைத் தள்ளி
ஒவ்வொரு மொழிக்கும் அடைமொழி சொல்லி
பாடுவேன் பாருங்கள் பாரினில் நீவிரும்
பாடுவார் இருவர் பார்த்தால் ஒருவர்
இப்படி உலகம் ஏதேதோ செய்திட
அப்படி நானென்ன இறைவா அடியேன்
பாடுவேன் ஆகையால் உன்னை நினைந்தே
பண்முறை கற்க முடியாமல் போச்சே
பையவே வருவாய் பக்தியாம் மாலைக்கு
ஐயையோ வெள்ளி மறந்து விட்டேனோ
கையினில் தாளம் கந்தசட்டிப் பாடல்
கையுறை இல்லையப்பா கற்கண்டும் தரவில்லை
செய்ய திருவடி சேவித்து நிற்கின்றேன்
நெற்றியில் விபூதி பொட்டுமோ குங்குமம்
தெற்றென விளங்கிட செய்த பணியன்றோ
காதினில் நிறையவில்லை கலட்டியில் தேவாரம்
கங்காணி முருகனுக்கும் களைப்பேனோ பாடலில்
திருவெம்பாவை யென்ன திருப்பள்ளி எழுச்சி என்ன
ஊஞ்சல் பாட்டென்ன ஊரார் கேட்டதென்ன
உற்ற நிகழ்வுகளில் திருப்பொற் சுண்ணமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றில்லாமல் பாடினனோ பல விடத்தும்
மீசாலை மக்கள் மிகவும் பக்தர்கள்
மேலைப் பதவிக்காய் மிகவாய் உழைப்பவர்கள்
பூவாலும் மாவாலும் கோலம் போட்டினும்
புனிதமாம் பணிகளினை புன்னகையோ டளிப்பார்கள்
மணியோசை கேட்டிட மக்கள் விழித்தெழும்
அணிசெய்ய ஆலயத்தில் அரியபணி வேண்டுமன்றோ
நினைத்தொருகால் முருகாவென அழையோமோ நாமும்
அரோகரா அப்பன் முருகனுக்கு அடியேன்
அளித்த சிறு காணிக்கை ஆலய மணியப்பா
எப்படியும் என் மூச்சு உன் சரணம் தானப்பா
இப்படியே எண்ணிநற் சுப்பிர மணியனும்
இணைந்தானோ கங்காணி முருகனுடன் இணைத்தானோ.

மக்கள் உயர்கல்வி முடித்தார் மற்றாங்கே
மணமுடித்தார் அக்காட்சி கண்டிடவும் பேறுற்றார்
அண்ணா மலையென்ன ஆறுபடை வீடென்ன
இறைவா நீ அற்புதம் செய் மதுரைப் பதியென்ன
தகுமோ தாய்மண்ணில் தானே குடியிருப்பாய்
அருள்வாய் மீசாலைப் பதியினில் குடியிருக்க
அருமையாம் காட்சி ஆகா நிறைவு
எந்தன் மகன்மார்க்கு எடுத்த மருமகள்மார்
திருவை ஒத்தார்கள் தெவிட்டாத பேரர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஆசையாய் பரம்பரைக் கதைகள்
செப்பிய காலங்கள் சென்று ஒழிந்தனவோ
நாடெல்லாம் குழப்பம் வீடெல்லாம் விட்டே
விரட்டிட ஓடி வடமராட்சி வாழ்ந்து
பெற்ற தாயும் பேதலித்த மன வாழ்வும்
பெரும்பழி நாமென்ன செய்தோம் பூமியிலே
கலி வந்து கூடி நளமகா ராஜனுமே
நலிவுற்ற நல்ல கதை கேட்டில்லைநாம் இப்போ
தெளிவுற்ற சிந்தனையில் திகழும் சிவனடியதனில்
களி கொண்ட வண்டு போல தேனைப்பருகவில்லை
ஆட்டு வித்தால் யாரொருவர் ஆடாதாரே
மீட்டொருகால் பாரோமோ மேன்மையாம் பாடல்களை
சாட்டு மொன்று சாவினுக்கு சாரவும் வேண்டுமாம்
காட்டிடுதே மாரடைப்பு என்றே கைவிரிக்க
போயினை ஐயாநீ புண்ணியனாம் பொன்னடிக்கோ.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பாடல்கள்

## கங்காணி முருகன் பேரில் ஆத்ம சாந்தி வேண்டுதல்

நாற்புறமும் தெங்கு பனை நான்கு மறை பாட
நானிலமும் சுப்ரமண்யா கானமும்மே லோங்க
சாற்றும் நல்ல கவிஞரெல்லாம் சிந்துகவி பாட
காப்பாற்றும் கங்காணி முருகாநீ வந்தே

ஆர்ப்பரித்து ஆடினையே பன்னிருகை வேலே
ஆனந்த மாமயிலில் ஏறி உட்கார்ந்தே
போற்றும் வள்ளி தெய்வானைசேர் அழகா இன்றே
ஏற்றிடுவாய் இசைபாடு சுப்பிரமணியன் தனையே.

காற்றோடு காற்றாக மூச்சான கந்தா
கதிரை மலை தனில் வாழு கதிர்காமக் கந்தா
பழனியிலே ஆண்டியான கோலந் தானென்ன
பார் மகிழ ஆத்ம சாந்தியை நீ அருள்வாய்.

## குலதெய்வமாம் மீசாலை வயற்கரை கூழாவடி வைரவர் பேரில் ஆத்ம சாந்தி வேண்டிய பாடல்

தென்ன சோலையுடன் தென்றற் காற்றுமது
நின்னைப் பாடியுமே அசைந்து நடமாட
வண்ணக் கூழாவடி வயிரவ சுவாமியப்பா
வந்தொரு கால் சாந்தி தாராயோ?

வடை மாலையோடு அமுதும் அடிக்கடி
தடையின்றி உண்பாய் நாம் தரவே
கடைத் தேறும்வகை ஆத்ம சாந்தி பெற
விடை தருவாய் சுப்பிரமணியன் தனக்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

மண்ணின் வாழ்க்கை நிலைப்பதில்லை
மனத்தில் யார்க்கும் இது நினைப்பில்லை
பண்ணிய புண்ணிய பாவங்கட் கேற்ப
பிறவி நேருமிதில் மாற்றமே இல்லை.
சுப்பிர மணியன் தானும் என்ன
சுத்தமாய் எவர்க்கும் மிதுகதி என்று
தப்பில் லாமல் தரும நெறியில்
தந்த நாட்களைப் பயன்படுத் திடுவோம்.

ஆடுங் கூத்தன் அடியை நினைந்து
பாடிப் பதமே சேரின் அல்லால்
வீடும் விலகும் வெறிதும் ஆகும்
நாடும் ஒருநாள் அனுப்பியாகும்
ஆண்டிக்கா இல்லை அரசர்க்கும் இது
மீண்டும் மீண்டும் வருவதாகும்.
நீண்ட கதைகள் பேசி என்ன
நினைவில் நிறுத்துவோம் நிசமிது வென்ன!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைமொழி

மண்ணிலே பிறப்போ ரென்றோ
விண்ணுல குக்குச் செல்வர்
புண்ணியம் பாவம் தொடரு
மென்பதைப் புந்தியிற் கொள்வோம்
எண்ணி நற்செயலே செய்வோம்
ஏழைகட் கிரங்கி ஈவோம்
கண்ணுதல் கொண்ட ஈசன்
கழலடி போற்றி வாழ்வோம்.

*இவரது புனித ஆத்மா இறைவனது திருவடியில் நின்று என்றும் சாந்தி அடைய இறைவனைத் துதிப்போம்.*

**ஓம் சாந்தி சாந்தி !**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

## திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 01.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
பூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆடலோ ரெம்பாவாய்.
02.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.
03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுவோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

04.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

05.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றாலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

07.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

08.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்வாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எனக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

09.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதையொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலாவ ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

10.

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

11.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பவரஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
13.

காதார் குழையாடப் பைம்பூண் கனலாட
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.
14.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
15.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.
16.

செங் ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாகக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
17.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
18.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.
19.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.
20.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய் புனைவதற்கு
ஏன்னின் அருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்றம் மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

## வேண்டுதல் கூற்று

காப்பெடுக்க வந்தவனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய்காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்த்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தெல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தெல்லோ அம்மா நீநோன்பிருந்தாய்
விரதத்தைக்கண்டே விழித்தான் சிவனும்
அம்மா உனையணத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழி வழியாய் காட்டிடுவீர்
நெறிநெறியாய் திகைப்போர்க்கு நெறியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிடுவாய் காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறும்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெரும் காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்குத் வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்வோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதேமாற்றிவிட்டால்
ஏசலின்றிவாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பொனம் பெருகிவரும் நல்வாழ்வுமிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தன சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழிதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெந்து காப்பதெனில் வழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவொரு விரதமிரு
பக்தி மனத்துடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
ஏம்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியெம்மைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்தவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய ஆலோசனை

01. தினமும் இலைவகைகள் உண்ண வேண்டும்.

02. ஒவ்வொரு முறை புகைக்கும் பொழுதும் ஒருவரின் ஆயுள் $5^1/_2$ நிமிடங்களால் குறைகின்றது.

03. நகத்து அழுக்குகளுடன் பலவித புழுக்களின் முட்டைகள் உடம்பினுள் செல்கின்றது.

04. மதுவிற்கு விலை கொடுத்து பல வித வருத்தங்களையும் வாங்க வேண்டாம்.

05. 4 மாதம் வரை தாய்ப்பால் மட்டும் குழந்தைகளுக்குப் போது மான உணவாகும் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். பின்பும் உப உணவுடன் தாய்ப்பாலும் தொடர வேண்டும்.

06. தாய்ப்பால் கொடுக்கும் தாய்க்கு மார்பகப் புற்று நோய் வருவது குறைவு. அத்துடன் அடுத்த கருத்தரிப்பதும் 25 வீதத்தால் குறையும் தாய் சேய் பிணைப்பையும் வலுவாக்கும்.

07. கொதித்து ஆறிய நீரைப் பருகவும்.

08. குளத்தில் நீராட வேண்டாம்.

09. எவ்வளவு அதிகமான நீரைப் பருகிறமோ அவ்வளவுக்கு நல்லது.

10. புகையிலை சாப்பிடுபவர்களுக்கு வாய்ப்புற்று நோய் வருவது அதிகம்.

11. சமைக்க முன்பும், மலம் கழித்த பின்பும், சாப்பிட முன்பும் கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.

12. தினமும் அல்லது வாரத்தில் 4 நாட்களாவது உடற் பயிற்சி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயாளர் கவனிக்கவேண்டியவை

01. தங்கள் நோய்க்கான காரணம் ஏதாவது இருப்பின் (Second ary HT) அதை முற்றாக நீக்கினாலோ அல்லது கட்டுப் படுத்தினாலோ தவிர தாங்கள் தொடர்ந்தும் மருத்துவ கண்காணிப்பின் கீழ் மருந்து உட்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

02. கிரமமாக கிளினிக் செல்வதுடன் மருந்தை நேரந்தவறாது உட்கொள்ள வேண்டும். (குருதி அமுக்கம் 140/ 90 இலும் குறைவாய் இருத்தல் விரும்பத்தக்கது)

03. உடல் நிலையில் ஏதாவது மாற்றம் தென்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

04. சமையலுக்கு மேலதிகமாக உப்புச்சேர்த்தல் உப்பூட்டிய உணவு வகைகள் (கருவாடு, ஊறுகாய், மோர்மிளகாய்) என்பவற்றைத் தவிர்த்தல் தேங்காய்ப்பால், தேங்காயெண்ணெய், கொழுப்பு, அதிகமான இறைச்சி வகைகள், பாற்பொருட்கள், முட்டை மஞ்சட்கரு, அதிகபால், நண்டு, இறால், கணவாய், ஆகியவற்றைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல் வேண்டும்.

05. உடல்நிறையை வயது, உயரம் என்பவற்றிற்கு ஏற்பப் பேண வேண்டும்.

06. நாளாந்தம் உடற்பயிற்சி செய்தல் விரும்பத்தக்கது.

07. புகைத்தல், அதிக மதுபானம் அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்த்தல் நல்லது.

08. உள நெருக்கீடு ஏற்படக்கூடிய சூழல், நிலைமை என்பவற்றைத் தவிர்த்தல் நல்லது. தியானம், யோகாசனம் விரும்பத்தக்கது.

09. தங்கள் நோய் பற்றிய குறிப்பொன்றை தங்களுடன் எப்போதும் எடுத்துச் செல்வது விரும்பத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடு

- பொன்னம்பலம்
  - கந்தையா + வள்ளிப்பிள்ளை
    - **சுப்பிரமணியம்**
    - செல்லத்துரை

- அருணாசலம்
  - கந்தையா + மீனாட்சியம்மா
    - குமாரசாமி
    - **சேதுநாயகி**
    - சிவசம்பு

**சுப்பிரமணியம்** + **சேதுநாயகி**

- **சிவகுமார்** + சிவமதி
  - ஷாம்பவி
  - விதுஷன்
- **சிவசுதன்** + ஜெயசுதா
  - சோபிதா
  - ஹர்சிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கை

அன்புடையீர்,

எமது குடும்பத்தலைவர் **திரு. கந்தையா சுப்பிரமணியம்** அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு உடனே வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர்க்கும், இறுதிக் கிரியைகள், அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியை என்பவற்றை முறைப்படி நடாத்திய அந்தணக் குருமார்களுக்கும், இதில் கலந்து கொண்ட அன்புள்ளங்கள் யாவருக்கும் இந் நினைவு மலரை அழகுற ஆக்கியோர்க்கும் நூல்வடிவில் ஆக்கித் தந்த கஜானனன் பன்முகசேவையினர்க்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நன்றி**

இங்ஙனம்
குடும்பத்தினர்

மீசாலை மேற்கு,
*மீசாலை.*

கஜானனன் பன்முகசேவை – அல்லாரை வீதி, மீசாலை – 060 2213378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org